**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 163/2021**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 20.11.2025 | | |
| பெயர்: | லியாகத்அலி<br>(PW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | ஹிதயத்துல்லா |
| கிராமம்: | கோவில்பத்து | தாலுக்கா: | தரங்கம்பாடி |
| தொழில்: | | வயது : | 70/2025 |

**4, 5–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 20.11.2025**

**(ஆரம்பித்த நேரம்– 12.42)**

வாதிக்கு பதிலாக நான் சாட்சியம் அளிக்கிறேன்.லோகம்மாள் என்பவர் எனது சொத்தை 3–ம் பிரதிவாதி வளர்மதியிடம் விற்றுவிட்டார். அந்த பத்திரம் செல்லாது என்று நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4–ம் பிரதிவாதியை பொறுத்து வில்லங்க சான்றிதழை பார்த்து சரியாக இருந்தால் தான் பதிவு செய்வார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பதிவு சட்டத்திற்கு உட்பட்டுதான் வா.சா.ஆ.6 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 4–ம் பிரதிவாதி இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினர் என்பதால் அவருக்கு எதிராக நான் கோருகின்ற பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.**

**மறு விசாரணை இல்லை.**

**(முடிவு நேரம்– 12.47)**